O.S.56/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:22.09.2023

பி.வா.சா.1–முத்தையா த/பெ – ராமசாமி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் வழக்கு சொத்து இருக்கும் ஊருக்கு அருகில் உள்ளேன். வழக்கு சொத்து பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும். வழக்கு சொத்து பெருமாள்சாமி தந்தை காளிமுத்துக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் பெருமாள்சாமி பெயரில் பட்டா உள்ளது. வழக்கு சொத்து பெருமாள்சாமியின் சுய சம்பாத்திய சொத்து இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை விற்பனை செய்யும் வரை பெருமாள் சாமி தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பெருமாள்சாமி என் மூலமாக விற்பனை செய்தததால் வாதி பவுன்ராஜீயிடம் சமரசம் பேசி பணம் கொடுக்க முயற்சி செய்தோம் என்றால் சரிதான். வாதி பணம் தேவையில்லை சொத்து தான் வேண்டும் என்று சொல்லிவிட்டார் என்றால் சரிதான். பூர்வீக சொத்தை பெருமாள்சாமி மட்டும் விற்பனை செய்தது தவறு என்றால் வாதியை தவிர மற்ற வாரிசுதாரர்கள் வந்தார்கள். விற்பனை செய்யும் போது வந்த பெருமாள்சாமியின் வாரிசுகள் கிரைய ஆவணத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். குடும்ப சொத்தை பெருமாள்சாமி மட்டும் விற்பனை செய்ய தகுதியும், உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல, அதனால் என் பெயரில் தாவா சொத்துக்கு பதிவு செய்யப்பட்ட அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.